Registered as a News Paper　　பக்கங்கள் 04　　விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　　Peoples Daily　　மக்கள் தினசரி

நாதம் 04　　திருவள்ளுவர் ஆண்டு 2024　　பங்குனி 21　　[03-04-1993]　　சனிக்கிழமை　　ஓசை 44


## பேராதனை வெளிவாரி பட்டப்பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெறாது

பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்பை மேற்கொண்டுள்ள மாணவர்களுக்கான இறுதியாண்டு (பி.ஏ) பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெற மாட்டாதெனவும் இப்பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்களை உடனடியாக பேராதனை பல்கலைக்கழகத்திற்கோ அன்றி கொழும்பு பல்கலைக்கழகத்திற்கோ செல்லுமாறும் யாழ். அரச அதிபர் கொழும்பிலிருந்து அறிவித்துள்ளார். மேற்படி பரீட்சை வரும் 17 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டபோதிலும் இறுதிநேரத்தில் இம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதேவேளை இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை கொழும்பிலிருந்து வரஇருக்கும் கல்வித்திணைக்களத்தை சேர்ந்த அதிகாரி ஒருவர் எடுத்துவருவதாகவும் அவர்யாழ்ப்பாணம்வரும்குமணகப்பலில் புறப்பட்டுள்ளதாகவும்தெரியவருகிறது.

# தெரிவுக் குழுவின் அணுகுமுறையால் இனப் பிரச்சினைத் தீர்வில் தடங்கல்

## கொழும்பு பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

“பாராளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து நாம் படித்துக் கொள்ள வேண்டியவை சில உண்டு. முதலில் கஷ்டமான காரியத்தைத் தொடக் கூடாது. இணக்கம் ஏற்படக்கூடிய ஒரு காரியத்தை அணுகி ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தி அதிலிருந்து முன்னேற வேண்டும். பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் அணுகு முறையும் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு ஓரளவு தடங்கலை ஏற்படுத்தி உள்ளது.” இவ்வாறு கொழும்புப் பல்கலைக் கழக உப வேந்தர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

அண்மையில் கண்டி குயின்ஸ் ஹொட்டலில் ‘சமாதானம்’ என்ற பொருளில் றோட்டரிக் கழகம் ஒழுங்கு செய்த கருத்தரங்கில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்;

ஒரே சீரான பாராளுமன்ற அமைப்பு முறை இங்கிலாந்தின் மரபு வழக்கத்துக்குப் பொருத்தமானது. ஆனால் மூன்றாம் உலக நாடுகளாகிய லத்தீன் அமெரிக்கா ஆபிரிக்கா மற்றும் ஆசியாவில் ஒரே இனம் சார்ந்த பாராளுமன்றம் பொருத்தமற்றது. இந்த நாடுகளில் அரசியல் யாப்பு சிறுபான்மையினரின் அபிலாசைகளைப்பிரதிபலிப்பதோடு, சிறுபான்மைஇனக்கோட்பாடு சம்பந்தமானதன்மைகொண்டதாகவும் அமைய வேண்டும். அதிகாரப்பரவலாக்கம் மற்றும் சமஷ்டி என்ற சொற்கள் உணர்வலைகளால் அரித்துப் போயுள்ளன. இனப்பிரச்சினைக்கு முன்னேற்றத்தைக் காண்பது கஷ்டமாகிவிட்டது சமஷ்டி என்ற சொல்லுக்கு உணர்ச்சி பூர்வமான எதிர்ப்பு உள்ளது. சமஷ்டி என்றதும் தேசம் பிரிவதற்குச் சமமாகக் கருதப்படுகிறது. ஒரு தகாத வார்த்தையாகவும் கருதப்படுகிறது, சமஷ்டி என்ற சொற்பிரயோகத்தைக் கேட்டதும் வெகுஜன சாதனங்களில் ஒரு பகுதி புத்தி பூர்வமற்ற முறையில் கண்டிக்கவும் செய்கிறது என்று கூறினார்.

அவர் மேலும், எல்லாச் சமஷ்டிகளும்ஒரேமாதிரியானவை அல்ல. அவுஸ்ரேலியாவில் உள்ள சமஷ்டி வேறு, கனடாவில் உள்ளது வேறு இந்திய சமஷ்டிக்கும் யூகோஸ்லேவாக்கிய சமஷ்டிக்கும் வேறுபாடு உண்டு, எமது நாட்டுச் சூழ்நிலைக்கும், வரலாற்றுக்கழகப் பண்பாட்டுக் கோலங்களுக்கு அமைய எமக்கென்று ஒரு சமஷ்டி ஆட்சியை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து நாம் படித்துக் கொள்ள வேண்டியவை சில உண்டு. முதலில் கஷ்டமான காரியத்தைத்தொடக்கூடாது. இணக்கம் ஏற்படக் கூடிய காரியத்தை அணுகி ஒரு நம்பிக்கையை ஏற்படுத்திஅதிலிருந்து முன்னேறவேண்டும். பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அணுகுமுறையும் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு ஓரளவு தடங்கலை ஏற்படுத்தியுள்ளது

எமது இன்னல்களுக்கான காரணங்களில் ஒன்று நாம்வழங்கும் கல்வியாகும். துட்டகைமுனு தமிழர்களை அடக்கி ஆண்டமன்னனாக எமது வரலாற்று ஏடுகளில் எழுதப்பட்டுள்ளது. இக்கால கட்ட வரலாற்றைப் படிக்கும் மாணவர்கள் இன உணர்வுக்குத் தூண்டப்படுகிறார்கள். வரலாற்றைத் திரித்துக் கூறக்கூடாது.

## குவேக்கஸ் குழுவினர்

இலங்கை வங்கி

## பருத்தித்துறைக் கிளையில் பணம் வழங்கக் கட்டுப்பாடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் வாடிக்கையாளர்களுக்குப் பணம் வழங்கும் நடவடிக்கைகள் வங்கியில் பணம் இல்லாமையினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.. இதனால் வங்கி வடிக்கையாளர்கள் தமது பணத் தேவைகளை பூர்த்திசெய்வதற்குச் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

கடந்த வாரம் வாடிக்கையாளர்களுக்குத் தலா ஆயிரம் ரூபா பணம் வழங்கப்பட்டு வந்தது. பின்னர் கப்பலில் பணம் வந்ததையடுத்து 31-ம் திகதி தலா பத்தாயிரம் ரூபாவும், 1-ம்திகதி தலாஐயாயிரம் ரூபாவும் வழங்கப்பட்டன. மேலும் வங்கி 2ம் திகதி தொடக்கம் வாடிக்கையாளர்களுக்குப் பணம் வழங்கமுடியாத நிலையில் இருப்பதாகத் தெரியவந்துள்ளது. இதனால் அரசாங்க சேவையாளர்கள் (ஆசிரியர்கள் உட்பட) தமது சம்பளப் பணத்தைப் பெற்றுக் கொள்ளமுடியாமல் அவதியுறுகின்றனர். (25)

## எறிகணை வீச்சு

(வடமராட்சி)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து வலிகாமம் மேற்குப் பகுதி குடியிருப்புக்களை நோக்கி நேற்று முன்தினம் இரவு 8. 30 மணி முதல் பலத்த ஆட்லறி எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஒரு மணித்தியாலமாக தொடர்ச்சியாக ஏவிவிடப்பட்ட பல எறிகணைகள் வலிகாமப் பகுதிகளில் விழுந்து வெடித்ததாக அறியமுடிகிறது.

எனினும் இதனால் ஏற்பட்ட சேதவிபரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. (யோ)

## அடுத்த வாரம் சார்க் மாநாடு

[டாக்கா]

சார்க் உச்சி மாநாடு இம்மாதம் 10ஆம், 11ஆம் திகதிகளில் பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் நடைபெறவுள்ளது.

இதில் கலந்து கொள்வதற்காக சிறிலங்கா ஜனாதிபதி திரு. பிரேமதாசா எதிர்வரும் 8 ஆம் திகதி இரவு கொழும்பி

(4 ஆம் பக்கம் பார்க்க)

அகத் கப்பல் ஊழியர் தொடர்பாக

# நெடுமாறனின் ரிட்மனுவை நீதிமன்றம் ஏற்றது

(ஹைதராபாத்)

கடந்த ஜனவரி 13ஆம்திகதி விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கிட்டுவை ஏற்றி வந்த எம். வி அகத் என்ற கப்பலில் இருந்த பத்துப் பேரையும் விடுவிக்கக்கோரி ப. நெடுமாறன் தாக்கல் செய்த ரிட் மனுவை ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துள்ளது. இம்மனுவை டிவிஷன் பென்ஞ் விசாரணைக்காக எடுத்துக்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கப்பலில் வந்தவர்கள் சர்வதேச நீர்ப்பரப்பில் வைத்து சட்டவிரோதமாக இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாகநெடுமாறன் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

## தொழிற் போட்டியினால் நோயாளர்கள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய

ஒழுங்கையில் அமைந்துள்ள இரு தனியார் சிகிச்சை நிலை

ஹொட்டலில் 'சமாதானம்' என்ற பொருளில் றோட்டரிக் கழகம் ஒழுங்கு செய்த கருத்தரங்கில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்;

ஒரே சீரான பாராளுமன்ற அமைப்பு முறை இங்கிலாந்தின் மரபு வழக்கத்துக்குப் பொருத்தமானது. ஆனால் மூன்றாம் உலக நாடுகளாகிய லத்தீன் அமெரிக்கா ஆபிரிக்கா மற்றும் ஆசியாவில் ஒரே இனம் சார்ந்த பாராளுமன்றம் பொருத்தமற்றது. இந்த நாடுகளில் அரசியல் யாப்பு சைகளைப்பிரதிபலிப்பதோடு, சிறுபான்மைஇனக்கோட்பாடு சம்பந்தமானதன்மைகொண்டதாகவும் அமைய வேண்டும். அதிகாரப்பரவலாக்கம் மற்றும் சமஷ்டி என்ற சொற்கள் உணர்வலைகளால் அரித்துப் போயுள்ளன. இனப்பிரச்சினைக்கு முன்னேற்றத்தைக் காண்பது கஷ்டமாகிவிட்டது சமஷ்டி என்ற சொல்லுக்கு உணர்ச்சி பூர்வமான எதிர்ப்பு உள்ளது. சமஷ்டி என்றதும் தேசம் பிரிவதற்குச் சமமாகக் கருதப்படுகிறது. ஒரு தகாத வார்த்தையாகவும் கருதப்படுகிறது, சமஷ்டி என்ற சொற் வெகுஜன சாதனங்களில் ஒரு பகுதி புத்தி பூர்வமற்ற முறையில் கண்டிக்கவும் செய்கிறது என்று கூறினார்.

அவர் மேலும், எல்லாச் சமஷ்டிகளும்ஒரேமாதிரியானவை அல்ல. அவுஸ்ரேலியாவில் உள்ள சமஷ்டி வேறு, கனடாவில் உள்ளது வேறு. இந்திய சமஷ்டிக்கும் யூகோஸ்லேவாக்கிய சமஷ்டிக்கும் வேறுபாடு உண்டு. எமது நாட்டுச் சூழ்நிலைக்கும், வரலாற்றுக்கழகப் பண்பாட்டுக் கோலங்களுக்கு அமைய எமக்கென்று ஒரு சமஷ்டி ஆட்சியை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

குழுவிலிருந்து நாம் படித்துக் கொள்ள வேண்டியவை சில உண்டு. முதலில் கஷ்டமான காரியத்தைத்தொடக்கூடாது. இணக்கம் ஏற்படக் கூடிய காரியத்தை அணுகி ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தி அதிலிருந்து முன்னேறவேண்டும். பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் அணுகுமுறையும் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு ஓரளவு தடங்கலை ஏற்படுத்தியுள்ளது

எமது இன்னல்களுக்கான காரணங்களில் ஒன்று நாம்வழங்கும் கல்வியாகும். துட்டகைமுனு தமிழர்களை அடக்கி ஆண்டமன்னனாக எமது வரலாற்று ஏடுகளில் எழுதப்பட்டுள்ளது. இக்கால கட்ட வரலாற்றைப் படிக்கும் மாணவர்கள் இன உணர்வுக்குத் தூண்டப்படுகிறார்கள். வரலாற்றைத் திரித்துக் கூறக்கூடாது. என்றாலும் துரதிர்ஷ்ட வசமாக எமது பாட நூல்களே

(4 ஆம் பக்கம் பார்க்க)

### அகதிக் கப்பல் ஊழியர் தொடர்பாக

# நெடுமாறனின் ரிட்மனுவை நீதிமன்றம் ஏற்றது

(ஹைதராபாத்)

கடந்த ஜனவரி 13ஆம்திகதி விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கிட்டுவை ஏற்றி வந்த எம். வி அகத் என்ற கப்பலில் இருந்த பத்துப் பேரையும் விடுவிக்கக்கோரி ப. நெடுமாறன் தாக்கல் செய்த ரிட் மனுவை ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துள்ளது. இம்மனுவை கடந்த திங்கள் உயர் நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் விசாரணைக்காக எடுத்துக்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கப்பலில் வந்தவர்கள் சர்வதேச நீர்ப்பரப்பில் வைத்து சட்டவிரோதமாக இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாகநெடுமாறன் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

# குவேக்கஸ் குழுவினர் மாத இறுதியில்யாழ். வருவர்

(யாழ்ப்பணம்)

குவேக்கஸ் சமாதானக் குழுவினர் இம்மாத இறுதியில் யாழ்ப்பாணம் வரவுள்ளதாக நம்பகமாக தெரியவருகிறது. இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் இவர்கள் யாழ்ப்பாணம் வந்து பேச்சுவார்த்தை நடாத்துவது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது

யாழ்ப்பாணம் வரவிருக்கும் இவர்கள் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவர் எனவும் தெரியவருகிறது.

குவேக்கஸ் குழுவினர் இதற்கு முன்னரும் யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதோடு, தளபதி கிட்டு வெளிநாட்டில் தங்கியிருந்த போது அவருடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இக் குவேக்கஸ் குழுவினர் தளபதி கிட்டு யாழ்ப்பாணம் வந்து கொண்டிருக்கையில் இந்திய கடற்படையினால் வழிமறிக்கப்பட்டு மரணமடைந்த வேளையில் தளபதி கிட்டு சமாதானத் திட்டத்துடனேயே யாழ் நோக்கி வந்து கொண்டிருந்தார் என்பதை ஓர் அறிக்கை மூலம் ஊர்ஜிதப் படுத்தியமையும் தெரிந்ததே.

### கிளாலி - பூநகரி
## படகுச்சேவை

கிளாலி- பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என தமிழீழ விடுதலைப் புலிகள் நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

## தொழிற் போட்டியினால் நோயாளர்கள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலைக்கு முன்னால் உள்ள ஒழுங்கையில் அமைந்துள்ள இரு தனியார் சிகிச்சை நிலையங்களுக்கிடையில் நிலவும் கடும் தொழில்போட்டியினால் நோயாளிகளும், பாதசாரிகளும் பாதிக்கப்படுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

தொழில்ரீதியில் விரோதம் கொண்டுள்ள இந்த இரு மருத்துவ நிலையங்களும் தத்தமது தரப்பில் பிரதிநிதிகளை ஒழுங்கை முகப்பில் சேவையில் ஈடுபடுத்தியுள்ளார்கள். காலை முதல் மாலை வரை ஆணும், பெண்ணுமாக சுமார் எட்டுப் பேர் இரு தரப்பிலும் இந்தப் பணியில் உள்ளார்கள். இவர்கள் நோயாளர்களைத் தொந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் முத்திரைக்கு பொருள்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ப.நோ.கூ.சங்கக்கிளைகளில் 1992 ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, மாணவ முத்திரைக்கு வரும் திங்கட்கிழமை மற்றும் செவ்வாய் போயா தினம் உட்பட முழுநாளும் உணவுப்பொருள் விநியோகம் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து ஏனைய நாட்களில் 12-04-93 வரை பிற்பகலிலும் விநியோகம் செய்யப்படவுள்ளது.

ஐப்பசி மாத முத்திரைக்கு கால்கிலோ பனை வெல்லமும் மிகுதி சீனியும், கார்த்திகை மார்கழி மாத முத்திரைக்கு ஒரு கைலண்ட் மா பக்கட்டும், மிகுதிக்கு பயறும் பட்டாணிப் பருப்பும் வழங்கப்படும்.

# நில்கிரி கப்பலில் 1750 பரல் மண்ணெய்

(வடமராட்சி)

'நில்கிரி' கப்பல் 1750 பரல் மண்ணெண்ணெயுடன் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பலில் இருந்து மண்ணெண்ணெய் பரல்கள் இறக்கும் வேலைகள் உடனேயே ஆரம்பமானது. மண்ணெண்ணெய் பரல்கள் இறக்கி முடிந்ததும் நாளை மீண்டும் இக் கப்பல் கொழும்புக்குப் புறப்படும்.

'நில்கிரி' கப்பலில் மூன்று வாரத்தில் மூன்று தடவைகள் மண்ணெண்ணெய்எடுத்துவரப் பட்டிருக்கிறது. இதுவரை மொத்தமாக 3990 பரல் மண்ணெண்ணெய்இக்கப்பல் மூலம் யாழ். மாவட்டத்திற்கு வந்துள்ளது. (யோ)

## கேட்டதிலும் அதிகம் அனுப்பப்பட்டதாம்

(கொழும்பு)

யாழ். அரசாங்க அதிபர் கேட்டதிலும் பார்க்கக் கூடுதலான அளவுமண்ணெண்ணெய் யாழ். குடாநாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டதாகப்புனர் வாழ்வு, புனரமைப்பு சமூக நலத்துறை அமைச்சின் முக்கிய பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மாதம் தோறும் 5000 பரல் மண்ணெண்ணெயை யாழ். குடாநாட்டிற்கு அனுப்பிவைக்குமாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. கா மாணிக்கவாசகர் வேண்டுகோள் விடுத்திருந்தார்

அதற்கு அமைவாகக் கடந்த மார்ச் மாதம் யாழ்.குடாநாட்டிற்கு 5137 பரல் மண்ணெண்ணெய் அனுப்பிவைக்கப்பட்டதாகவும் இது யாழ். அரச அதிபர் கேட்டதிலும் பார்க்க கூடுதலானது எனவும் அப்பேச்சாளர் தெரிவித்தார்.

### படையினரின் தாக்குதலுக்கு

# மூன்று மாத காலத்தில் 109 தமிழ் மக்கள் பலி

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டின் முதல் காலாண்டுப் பகுதியில் 109 தமிழ் மக்கள் சிறிலங்கா படைகளினால் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் மார்ச் 31ஆம் திகதி வரையே இவ்வளவு தொகையானோர் படையினரின் தாக்குதலில் மட்டும் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

கொல்லப்பட்ட 109 தமிழர்களில் கிளாலி கடற்பரப்பில் வைத்து சிறிலங்கா கடற்படையினால் 67 பேர் கொல்லப்பட்டனர். 21 பேர் படையினரின் எறிகணைத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச்சூடுகளினாலும் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் 11 பேர் சிறிலங்கா விமானப்படையின் சுப்பர்சொனிக் விமானக் குண்டு வீச்சுகளிலும், 10 பேர் புக்காரா மற்றும் சியாமார் செட்டி குண்டுவீச்சு விமானங்களின் குண்டுத்தாக்குதலிலும் கொல்லப்பட்டுள்ளனர்.

## சிறிலங்கா ராணுவத்தில் பெண் கொமாண்டோ அணி

(கொழும்பு)

விசேட பெண் கொமாண்டோ பொலிசார் அம்பாறை மாவட்டத்தில் கெரில்லா பயிற்சியை தற்போது மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் இவ் அணிக்கு 29 பேர் சேர்த்துக்கொள்ளப் பட்டனர். இவர்களுக்கு களுத்துறை கட்டுக்குறுந்தை முகா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு முகாமிலிருந்து பலத்த எறிகணை வீச்சு

ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் பலத்த எறிகணைத் தாக்குதல் நடத்தப் பட்டது. ஏவப்பட்ட எறிகணைகள் அல்லிப்பளை, மாசார் போன்ற இடங்களில் வீழ்ந்து வெடித்ததாகவும், இதே வேளை இரவு 8.00 மணியளவில் கடலில் இருந்து படையினர் பீரங்கித் தாக்குதலை நடத்தியதாகவும் அறியப்படுகின்றது. [86]

## கல்வியை கைவிடும்நிலையில் நாவற்குழி முகாம் மாணவர்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து தற்போது நாவற்குழியில் ரயர் தொழிற்சாலைஅகதிகள் முகாமில் உள்ள 250க்கு மேற்பட்ட மாணவர்கள் கடந்த ஒன்பது மாதங்களுக்கு மேலாகபாடசாலைகளின் அனுமதி கிடைக்காமையால் கல்வியைக் கைவிடும் நிலையில் உள்ளனர்.

வலிகாமம் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த சுமார் 400 மாணவர்கள் இந்த முகாமில் உள்ளனர். இவர்களில் 150 பேர் முகாமிற்கு அருகே உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலுகின்றனர். ஏனைய மாணவர்களை இங்கு அனுமதிப்பதற்கு இப்பாடசாலையின் வளங்கள் போதாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இம் முகாமில் தங்கியுள்ள சுமார் 250 மாணவர்கள் கல்வியைக் கைவிடும் நிலையில் இருப்பதாக பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர். தூர இடங்களிலுள்ள பாடசாலைக்கு செல்வதற்கும் போக்குவரத்துப் பிரச்சினை பெரும் முட்டுக்கட்டையாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் மீண்டும் தபால் பொதிகள் தவம்

[யாழ்ப்பாணம்]

யாழ். குடா நாட்டிற்கான தபால் பொதிகள் தொடர்ந்து கொழும்பில் தேக்கம் அடைந்துள்ளன.

நேற்று நண்பகல் வரை 'குமண' கப்பலில் தபால் பொதிகளை ஏற்றியது பற்றி தகவல் எதுவும் கிடைக்கப் பெறவில்லை. சென்ற மாதம் 10 ஆம்திகதிவரை கொழும்பில் இருந்த 1164தபால்பொதிகள் 'வாதுவ' கப்பலில் கொண்டு வரப்பட்ட பின்னர் இன்று வரை எந்த ஒரு கப்பலிலும் தபால் பொதிகள் கொண்டு வரப்படவில்லை.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### ஸ்ரீ லங்கா அச்சகம்

மக்களின் நல்மதிப்பைப் பெற்ற ஸ்ரீ லங்கா அச்சகம் (புத்தகசாலையல்ல) தனது சொந்த இடத்திலேயே (ராஜா தியேட்டர் அருகாமை ஸ்ரீகாந்தா அச்சகலேன்) இயங்கிக் கொண்டிருக்கின்றதென்பதை அன்பான மக்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றோம். சிந்தியுங்கள்! செயல்படுங்கள்! (4563]

### தவறிவிட்டது

சென்பற்றிக்ஸ் வீதிக்கும், ஆஸ்பத்திரி வீதிக்கும் இடையில் ஐ. சூரியகுமாரன் அவர்களின் லண்டன் வங்கிக்கான £39 50 காசோலை (Draft) ஒன்றும் அத்துடன் பொறியியல் நிறுவனம் ஒன்றின் படிவங்களும், புத்தகமும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில்ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (4613)

### விறகு சிக்கனம்

கணகணப்பூட்டும் சாணவிறாட்டி பாவித்துச் சமையல் அடுப்பு விறகில் சிக்கனம் காணுங்கள். சாணவிறாட்டி ஒன்றின விலை ரூபா 1/- மட்டுமே. 'மில்க்வைற்''(சி-6320)

### பாதுகாத்துக் கொள்ளுங்கள்

பெறுமதிமிக்க உங்கள் வீடியோ படச்கசட்டுகள் பங்கஸ், தூசி படிந்துள்ளதா? மேலும் படிந்து பழுதடையமுன் அதற்கென தயாரிக்கப்பட்ட கருவி மூலம் சிறந்த முறையில் துப்புரவு செய்துகொள்ள வீடியோஸ்ரார் இல. 7/6, பிறவுண் வீதி, முதலாம் லேன் யாழ்ப்பாணம். (4481)

### சென்மேரிஸ் சனசமூக நிலையம்

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்: முதலாம்பரிசு 595, இரண்டாம் பரிசு 2105 மூன்றாம் பரிசு 1305, ஆறுதல் பரிசுகள் 817, 2134, 835, 003, 1944. பரிசுக்குரியவர்கள் 11-4-93க்கு முன் நிர்வாகிகளுடன் தொடர்புகொள்ளவும் (4615)

### நிலுவையுடன் ஆசிரியர் சம்பளம்

வேலணைக் கோட்டப் பாடசாலைகளில் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் பங்குனிமாதச் சம்பளத்துடன் 01-01-93 தொடக்கம் அதிகரிக்கப்பட்ட சம்பளமும் நிலுவையுடன்வழங்கப்பட்டுள்ளது

---

பிரதேச செயலகங்கள்

## வர்த்தமானி மூலம் பிரகடனம் செய்ய வேண்டும்

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் பிரதேச செயலகங்களாக மாற்றப்படுவதற்கு முன் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்த வேண்டும் என்பதுடன் சிரேஷ்ட அதிகாரிகளே அப்பதவிக்கு நியமிக்கப்பட வேண்டும் என தெரியவருகின்றது.

அரசாங்க அதிபர் வசமுள்ள மத்திய அரசாங்கத்தின் நிர்வாகப் பொறுப்புக்கள் பிரதேசங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதற்கு முன்னர் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாணசபை அமைச்சினால் பிரதேச செயலகங்கள் வர்த்தமானிமூலம் பிரகடனப் படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் சிரேஷ்ட அதிகாரிகள் பிரதேச செயலர்களாக மத்திய அரசாங்கத்தினால் அதிகார பூர்வமாக நியமிக்கப்படுதல் வேண்டும்.

இந்நிகழ்வுகள் நிறைவேறும் வரை தற்போதுள்ள மாகாண சபையினால் நியமிக்கப்பட்டுள்ள உதவி அரசாங்க அதிபர்களான பிரதேச செயலர்கள் மாகாண சபையிலிருந்து தமக்குரிய நிதியைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

மத்திய அரசாங்கத்தின் பிரதேச செயலர்கள் நியமிக்கப்பட்ட பின்னர்தான் மத்திய அரசாங்கத்திடமிருந்து அபிவிருத்தி தொடர்பான நிதிகள் இம் மாவட்டத்திற்கு கிடைக்கக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும்.

அதேசமயம் கடந்த ஆண்டுகளில் நடந்ததைப் போன்று அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடுகளை அரசாங்க அதிபருக்கே நேரடியாக அனுப்புவதற்கான தீர்மானங்களை எடுப்பதையிட்டு கொழும்பு அமைச்சு மட்டங்களில் கலந்துரையாடல்கள் நடைபெறுவதாக தெரிய வருகின்றது. (சி)

### மிகிந்தலையில் பௌத்த பல்கலைக்கழகம்

(கொழும்பு)

இலங்கையில் பௌத்த தர்மம் அறிமுகப்படுத்தப்பட்டு 2300 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு மிகுந்தலை நகரில் பௌத்த பல்கலைக் கழகம் ஒன்று திறக்கப்படவுள்ளது.

மேற்படி ஆரம்பிக்கப்படவுள்ள பௌத்த பல்கலைக் கழகத்தின் அங்குரார்ப்பணவிழாவில் இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா பங்குபற்றுவார் என மந்திரி சபைப் பேச்சாளரான அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

### பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

மட்டுவில்-சாவகச்சேரி விரவாணி நாச்சிமார் கோவில் முன்பாக இலக்குணராசா என்பவரினால் கண்டெடுக்கப்பட்ட பெண்கள் அணியும் கைக்கடிகாரம் ஒன்று எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் வந்து ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்.

### பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வண் - தெற்கு கொத்தணி அதிபராக இருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் திரு. சி. சிவசரவணபவன் (சிற்பி) அவர்களின் சேவையைப் பாராட்டி மேற்படி கொத்தணி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் நடாத்தும் 'சேவைநலம் பாராட்டு விழா' எதிர்வரும் திங்கட்கிழமை நண்பகல் யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரி விவேகானந்த மண்டபத்தில் கொட்டடி நமசிவாய வித்தியாலய அதிபர் திரு. சண்முகநாதன் தலைமையில் நடைபெறும். (22)

## தேர்தல் சட்டங்கள் அமுலாக்குவதில் தீவிரம்

சுதந்திரமான நியாயமான முறையில் தேர்தல் நடைபெறுவதற்கான முறையில் மாகாணசபைத் தேர்தல் சட்டத்தை சரிவர அமுல் நடத்த தேவையான எல்லா நடவடிக்கையும் மேற்கொள்ள உறுதி செய்ய வேண்டுமென்று பொலிஸ்மா அதிபர் பொலிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இதற்கான மாகாணசபைத் தேர்தலுக்கான சகல பாதுகாப்பு ஏற்பாடுகளையும்பொலிஸ் செய்துள்ளதுடன் நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்யும் தினத்தில் இருந்து தேர்தல் கருமங்களை நிறைவேற்றல் தொடர்பாக விசேட தேர்தல் பிரிவொன்று பொலிஸ் தலைமையகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா தெரிவித்தார்.

இந்த தேர்தல் செயலகத்திற்கு டி. ஐ. ஜி. இக்னேஷியஸ் கனகரத்தினம் பொறுப்பாக இருப்பார் என்று தெரிய வருகின்றது.

### சுங்கத் தீர்வை அதிகரிப்பு

இறக்குமதி செய்யப்படும் பத்திரிகைத் தாள்களின் சுங்கத் தீர்வை 30-ம் திகதி நள்ளிரவுடன் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

## 3 மாத காலத்திற்குள் 98 பேருக்கு விசர்நாய்க்கடி

[யாழ்ப்பாணம்]

நாய்க்கடிக்கிலக்கானோரின் எண்ணிக்கை கடந்த மூன்று மாதத்துள் 421ஐ தாண்டியுள்ளது இதில் 98 பேர் விசர் நாய்க்கடிக்கு இலக்காகியுள்ளனர் என யாழ். வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஜனவரி மாதம் 133 பேர் நாயினால் கடியுண்டார்கள். இதில் 30 பேர் விசர் நாய்க்கடிக்கு இலக்கானார்கள் எனவும், பெப்ரவரி மாதம் 139 பேர் கடியுண்டார்கள். இதில் விசர்நாயினால் கடியுண்டவர்களின் எண்ணிக்கை 25 என்றும், மார்ச் மாதம் 179 பேர் கடியுண்டார்கள். அதில் 43 பேர் விசர்நாய்க்கடிக்கு இலக்காகி உள்ளார்கள் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (சி)

---


வட பிராந்திய சுருட்டு தொழிலாளர்

## சங்க அறிவித்தல்

சகல சுருட்டுத் தொழிலாளர்களும் தங்களின் உறுப்புரிமையை உறுதி செய்வதற்கான விண்ணப்பப் படிவத்தினை பெற்று பூரணப்படுத்தி அலுவலகத்தில் ஒப்படைத்து அதற்கான அங்கத்துவ இலக்க அட்டையை பெற்றுக் கொள்ளும்படி அன்பாக கேட்டுக் கொள்கிறேன்.

– தலைவர்

இல. 71, கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

(சி/6327)


---


உ



பரந்தன் 3-ம் வாய்க்கால் பன்னைக்கண்டி

அருள்மிகு

## பிள்ளையார் கோவில்

## மகோற்சவ விழா

கொடியேற்றம்:- 6.4.1993 செவ்வாய்க்கிழமை பகல் 11-00 மணி
தேர்த்திருவிழா:- 14.4.1993புதன்கிழமை(வருஷப்பிறப்பு)பகல்10-00மணி
தீர்த்தோற்சவம்:- 15.4.1993 வியாழக்கிழமை பகல் 10-00 மணி

அன்பர்கள் அனைவரும் விழாக்காலங்களில் வருகைதந்து தரிசித்து விநாயகப் பெருமான் திருவருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.

பன்னைக்கண்டி
3-ம் வாய்க்கால்,
பரந்தன்.

இங்ஙனம்
ஆலய பரிபாலன சபையினர்.
(3388)


---

## 09ஆவது ஆண்டு நினைவலைகள்

மலர்வு 20 - 06 - 1935



உதிர்வு 14 - 03 - 1984

## கவிஞர் ஈழவாணன்

மு- தர்மராஜா

[லிங்கநகர், திருக்கோணமலை]

திதி- 3-4-93

மறக்குமோ மக்கள் நெஞ்சம்?

செந்தமிழ்க் கவிதை செய்தாய்!
சிந்தையில் அன்பு பெய்தாய்!
எந்தமிழ் வாழுமட்டும்
இருந்திடும் பேறு பெற்றாய்!
ஒன்பது ஆண்டு காலம்
ஓடின! உனைப் பிரிந்து
மன்னவா! உன்னை என்றும்
மறக்குமோ! மக்கள் நெஞ்சம்?

கவியுள்ளங்கள் சார்பாக-நிலா தமிழின்தாசன்

அன்பின் நினைவில்;
மனைவி- த புவனேஸ்வரி
மக்கள்: தர்ஷினி
,, தர்ஷியன்
,, தாரணன்
(போராளி-நிமலன்/வேங்கையன்)

ஞானவைரவர் கோவிலடி,
திருநெல்வேலி

[சி/6326]

## நினைவு கூருகின்றோம்...

## 1993-04-03

## செண்மேரிஸ் சனசமூக நிலையம்

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்: முதலாம்பரிசு 595, இரண்டாம் பரிசு 2105 மூன்றாம் பரிசு 1305, ஆறுதல் பரிசுகள் 817, 2134, 835, 003, 1944. பரிசுக்குரியவர்கள் 11-4-93க்கு முன் நிர்வாகிகளுடன் தொடர்புகொள்ளவும். (4615)

## நிலுவையுடன் ஆசிரியர் சம்பளம்

வேலணைக் கோட்டப் பாடசாலைகளில் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் பங்குனிமாதச் சம்பளத்துடன் 01-01-93 தொடக்கம் அதிகரிக்கப்பட்ட சம்பளமும் நிலுவையுடன்வழங்கப்பட்டுள்ளது

ஆனால் யாழ். பிரதேசப் பணிமனையின்கீழ் வரும் வேறு எக்கோட்டக் கல்வி அலுவலகமும் இந் நிலுவைகளுடன் சம்பளங்களை வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இக் கோட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களின் சுய விபரக் கோவைகளும் புதிதாக மீளவும் தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (17)

எது.

மேற்படி ஆரம்பிக்கப்படவுள்ள பௌத்த பல்கலைக் கழகத்தின் அங்குரார்ப்பணவிழாவில் இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா பங்குபற்றுவார் என மந்திரி சபைப் பேச்சாளரான அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கா கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

## பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

மட்டுவில்-சாவகச்சேரி விரவாணி நாச்சிமார் கோவில் முன்பாக இலக்குணராசா என்பவரினால் கண்டெடுக்கப்பட்ட பெண்கள் அணியும் கைக்கடிகாரம் ஒன்று எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் வந்து ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்.

✻

(யாழ்ப்பாணம்)

தோமாஸ்மேரி ஜெசிந்தா என்பவருடைய 585483397V என்னும் இலக்கம் கொண்ட தேசிய அடையாள அட்டை ஒன்று புலோப்பளையில் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## தமிழர்களின் வரலாறு பாட புத்தகங்களில் மறைப்பு

– இளங்குமரன்

(வடமரட்சி கிழக்கு)

'இலவச பாடப்புத்தகவிநியோகம் என்ற போர்வையில் சிறிலங்கா அரசு தமிழ் மக்களின் வரலாற்று உண்மைகளை, மாணவர்களின் பாடப் புத்தகங்களில் மறைத்துள்ளது.'

நாகர்கோயில் மகாவித்தியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை வடமராட்சி கிழக்கு பாடசாலைகளில் பயின்று ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும், பல்கலைக் கழகம் சென்ற மாணவர்களுக்கும் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் இவ்வாறு கூறினார்

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இப்பரிசளிப்பு விழா சங்கத் தலைவர் திரு. எஸ். பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது.

திரு. இளங்குமரன் அவ்வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றும்போது. "தமிழ் மாணவர்கள் இப்போராட்ட சூழ்நிலையில் பெரும் கஷ்டங்களின் மத்தியில் தங்கள் கல்வியினைத் தொடர்ந்து வருகின்றார்கள். இவர்களில் வடமராட்சி கிழக்கு மாணவர்களின் கஷ்டம் இன்னமும் இரட்டிப்பானது ஆகும்.

இலவச பாடப் புத்தக விநியோகம் என்ற போர்வையில் தமிழ் மக்களின் வரலாற்று உண்மைகளைப் பாடப் புத்தகங்களில் சிறிலங்கா அரசு மறைத்துள்ளது.

கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடப் புத்தகங்களைத் தமிழ் மாணவர்களுக்குக் குறிப்பிட்ட காலங்களில் அனுப்பி வைக்காது அவர்களது கல்வியினைச் சிறிலங்கா அரசு சீரழித்து வருகின்றது" என்றார்.

இவ்வைபவத்தில் கடற்புலிகள் மக்கள் பொது நிர்வாகத் தொடர்பாளர் திரு. மறவன் உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

கடற்புலிகளினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பரிசுப் பொருள்களைத் திரு. இளங்குமரன் மாணவர்களுக்கு வழங்கினார். (36)

---

# பிள்ளையார் கோவில்

# மகோற்சவ விழா

கொடியேற்றம்:- 6.4.1993 செவ்வாய்க்கிழமை பகல் 11-00 மணி
தேர்த்திருவிழா:- 14.4.1993புதன் கிழமை(வருஷப்பிறப்பு)பகல்10-00மணி
தீர்த்தோற்சவம்:- 15.4.1993 வியாழக்கிழமை பகல் 10-00 மணி

அன்பர்கள் அனைவரும் விழாக்காலங்களில் வருகைதந்து
தரிசித்து விநாயகப் பெருமான் திருவருள்
பெறுமாறு வேண்டுகின்றோம்.

பன்னைக்கண்டி
3-ம் வாய்க்கால்,
பரந்தன்.

இங்ஙனம்
ஆலய பரிபாலன சபையினர்.
(3388)

---

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான ஆங்கீரச வருடம் பங்குனிமாதம் 21ஆம் திகதி 3. 4. 93 சனிக்கிழமை மக நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் பகல் 11.00 மணி முதல் 12.00 மணிவரையுள்ள மிதுன லக்கின சுப முகூர்த்த வேளையில்.

அச்சுவேலியைச் சேர்ந்த
கலாநிதி. திருமதி
சித்திரவடிவேலு தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரன்
திருநிறைச் செல்வன்
**கருணசீலன்**
B. Sc. [Lond.]
அவர்களுக்கும்

திருநெல்வேலியைச் சேர்ந்த
திரு. திருமதி
வைரமுத்து தம்பதிகளின்
புத்திரி
திருநிறைச்செல்வி
**கௌசலா**
அவர்களுக்கும்

திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து சிறப்பித்து மணமக்களை வாழ்த்தி அதைத் தொடரும் விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமணம் நடைபெறும் இடம்

Dewana Social Club, 229 Romford, Forestgate London E 7

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

கலாநிதி, திருமதி
சித்திரவடிவேலு
திரு. சி. தர்மசீலன்
25, Vicarage Farm Road,
Hounslow West
Hounslow Middlesex TW3 4NH.

திரு. திருமதி
லோகேஸ்வரன்
திரு. திருமதி இரத்தினகுமார்
32. Leigh Road
Eastham London E6 2AS

(4609)

---

ஒன்பது ஆண்டு காலம்
ஓடின! உனைப் பிரிந்து
மன்னவா! உன்னை என்றும்
மறக்குமோ! மக்கள் நெஞ்சம்?

கவியுள்ளங்கள் சார்பாக-நிலா தமிழின்தாசன்

அன்பின் நினைவில்;
மனைவி- த புவனேஸ்வரி
மக்கள்: தர்ஷினி
,, தர்ஷியன்
,, தாரணன்
(போராளி-நிமலன்/வேங்கையன்)

ஞானவைரவர் கோவிலடி,
திருநெல்வேலி [சி/6326]

---

## நினைவு கூருகின்றோம்...

## 1993-04-03

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு-புல்லுமலையில் சிறிலங்கா அதிரடிப்படையிடம் கைதாகி வருகையில் கொடுவாமடுப் பகுதியில் ஈரோஸ் அமைப்பின் குண்டு வெடிப்பில் சிக்கியதில் வீரச்சாவெய்திய-

தவராசா (சீ. தவராசா - புல்லுமலை - மட்டு.)

ராஜன் ( - புல்லுமலை - மட்டு.)

1988ஆம் ஆண்டு யாழ் - இளவாலையில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய-

முரளி (.........)

1991ஆம் ஆண்டு மன்னார் - நானாட்டன் பகுதியை நோக்கி முன்னேறி வந்த சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

2-ம் லெப். வசிட்டன் (மாணிக்கரஞ்சன் நாகராசா- நானாட்டன் - மன்னார்)

2-ம் லெப். சுந்தரம்பிள்ளை (திருச்செல்வம் சகாயநாதன் - வாழ்க்கைப்பட்டான் கண்டல்- நானாட்டன், முருங்கன் - மன்னார்)

மகாலிங்கம் (இராமையா புண்ணியமூர்த்தி - செட்டியார்கட்டை, அடம்பன் - முருங்கன்- மன்னார்)

புவிராஜ் (யோ. ஜோண்சன் - பெரியகட்டு செட்டிக்குளம் - வவுனியா)

வவுனியா- பம்பைமடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

துரோணர் (இலட்சுமணன் விநாயகமூர்த்தி - இரணை இலுப்பைக்குளம் - வவுனியா)

யாழ் - காரைநகரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

கண்ணன் (அரியரட்ணம் யூட்மேரி ஜோர்ஜ்- கரம்பன் தெற்கு, ஊர்காவற்றுறை - யாழ்.)

1992ஆம் ஆண்டு யாழ் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவக் காவலரண் தகர்ப்பின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

கப்டன் கண்ணன் (தர்மலிங்கம் அம்பிகைபாலன்- சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலி- யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6324)

### சிந்தனைக்கு

தாங்கள் கூறும் பொய்களை விழுங்க முடியாமல் தவித்தே இறுதியில் அழிகின்றன. எல்லா அரசியல் கட்சிகளும்.

- ஜான் ஆர்பத்னாட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 03-04-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

# கழுத்தின் மேல் கத்தி

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவிற்கும், இந்திரா காங்கிரஸிற்கும் இடையிலான மோதல் ஜெயலலிதாவின் ஆட்சிக்கு எப்பொழுது உலை வைக்கும் என மக்கள் பொழுதை எண்ணிக் கொண்டிருக்கும் நேரம் வந்து விட்டது. ஏனெனில் அதற்கான சமிக்ஞைகள் தமிழக அரசியலில் வெளிப்படையாகவே தெரியத் தொடங்கியுள்ளன.

மாநிலத்திலுள்ள காங்கிரஸ்காரர்கள் ஜெயலலிதாவுடன் இனி நல்லுறவைப் பேண முடியாது என ஏற்கனவே அறிவித்திருந்த போதும், மத்தியிலுள்ள ஒரு பகுதியினர் அ.தி.மு.க வுடன் அரசியல் கூட்டு கொண்டிருக்கவே விரும்பினர். இதற்காகவே சென்னை வந்து அ. தி. மு. க வுடன் பேச்சுக்களும் நடத்தினர். இதற்குப் பிரதமர் நரசிம்மராவின் ஆதரவும் இருந்ததாகத் தெரியவந்தது. ஆனால் தற்பொழுது இந்நிலை மாற்றமடைந்துள்ளது போலவும், இனி ஜெயலலிதாவின் தலைமையிலுள்ள அ. தி. மு. க. ஆட்சிக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதெனவும் தீர்மானித்துள்ளது போன்றும் தெரிகின்றது அதாவது ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசாங்கத்தை சந்தர்ப்பம் பார்த்து கலைத்து விட மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசு தீர்மானித்து விட்டது எனக் கூறின் அது மிகையில்லாத ஒன்று என்றே தெரிவிக்கலாம்.

இதன் ஒரு கட்டமாகவே தேர்தல் கமிசனிடம் ஜெயலலிதா மீதான ஊழல் குற்றச்சாட்டை விசாரணைக்கெனத் தமிழக ஆளுநர் பீஷ்மன்நாராயண் சிங் அளித்தமையாகும். இவ்விசாரணையை இடைநிறுத்தி வைப்பதற்கான இடைக்கால உத்தரவை உயர் நீதிமன்றத்திடம் இருந்து ஜெயலலிதா பெற்றிருப்பினும் ஜெயலலிதாவின் ஆட்சியைத் தமிழக ஆளுநரின் நடவடிக்கை எச்சரிக்கை செய்துள்ளது, ஏன்? அச்சுறுத்தியுள்ளது என்றே கூறலாம்.

தமிழக ஆளுநரின் இம்முடிவானது ஏதோ சட்டத்தின் மீது அவர் கொண்ட பற்றினாலோ, மக்களின் மீது கொண்டுள்ள அக்கறையினாலோ எழுந்ததல்ல. மத்திய அரசின் கண்ணசைப்பினால் நிகழ்ந்தது. இந்தியாவைப் பொறுத்து ஆளுநர்கள் என்பது அரசியலமைப்பில் உள்ளது போன்று ஜனாதிபதியின் பிரதிநிதிபோல் என்றும் செயற்பட்டது கிடையாது. அவர் மத்தியில் ஆட்சியி

# ஒன்றிணைந்த சத்துணவுச் சீராக்கல் திட்டம்

## ஓர் அறிமுகம்

தமிழீழ விடுதலைப் போராட்டமானது இன்று ஓர் உறுதியான அத்திவாரத்தின் மேல் கட்டியெழுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது. இவ்வாறான விடுதலையை நோக்கிய எமது தேசத்திற்கான கட்டுமானப் பணியில் எவ்வாறு ஓர் உறுதிமிக்க தலைமையின் வழிகாட்டலில் உறுதியான அத்திவாரத்தை இட்டு இந்தப் பணியை வெற்றிகரமாக இன்று வரை நிறைவேற்றியிருக்கின்றோமோ அவ்வாறே இப்பணியை நிறைவேற்றிட உறுதியான, எந்த ஒரு சூழ்நிலைக்கும் தாக்குப் பிடிக்கக் கூடிய ஒரு விடுதலையடைந்த தேசத்தை கட்டிமுடிக்க வேண்டுமானால் இடையே உறுதிமிக்க தூண்களையும், தாங்குவளைகளையும் அமைக்க வேண்டிய தேவை உருவாகிறது. அவ்வாறே அந்தப் பணியை ஆரம்பிக்கவேண்டிய காலகட்டத்தை நாம் எட்டி விட்டோம் என்றால் அது மிகையாகாது.

எமது தனித்துவம் மிக்க பொருளாதார வளம், எமது மக்களின் சிறந்த உடல் உளவலுப்பாதுகாப்பு கல்விவளர்ச்சி கலைகலாசார வளர்ச்சி என்னும் தூண்களே எமது இந்தப் பணியில் பிரதான பங்கு வகிக்கின்றன. எனவே அவற்றின்பால் எமது முழுக் கவனத்தையும் திசைதிருப்பி எம்மண்ணில் ஒரு தனித்துவமான சமூக, பொருளாதார, சுகாதார, கல்விக் கட்டமைப்பை ஏற்படுத்தி திட்டமிட்ட ரீதியில் எமது பணியை தொடர வேண்டியது அவசிமாகிறது.

இந்தவகையில் ஒவ்வோர் துறையினதும் வளர்ச்சியானது நீண்டகால அடிப்படையில் திட்டமிடப்பட்ட செயல் வடிவம் பெற்று வருகின்றன, இவற்றைச் செயற்படுத்துவதில் எதிரியால் ஏற்படுத்தப்படுகின்ற தடைகள் ஓர் இடையூறாக இருக்கின்றபோதும் அதுவே எமது பலமாகவும் என்றும் எங்களிலேயே நாம் தங்கி நின்று வாழக்கூடிய பலமான திட்டங்களை வகுக்கவும் ஏதுவாக அமைகின்றன.

இவ்வாறு நாம் ஒவ்வோர் துறையினதும் வளர்ச்சி பற்றி எடுத்து நோக்கும்போது எமது மக்களின் உடல், உள நலன் பேணும் சுகாதார சேவைகள் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றன.

வகையில் அடிப்படைத் தேவைகள் பற்றி எடுத்து நோக்கும்போது உணவு முதலிடத்தைப் பெறுகிறது.

இன்றைய காலகட்டத்தி எமது மக்களின் உணவுப்பிரச்சினையின் பரிமாணங்களை எடுத்து நோக்குபோது,

1. மக்கள் முதன்மைப்படுத்தி நுகரும் உணவுப்பொருள்கள் போதியளவு கிடைக்காமை
2. அந்நியப்பிரதேசங்களில் இருந்து கொண்டு வரப்படும் மேற்படி உணவுப் பொருள்களின் விலை அதிகமாககாணப்படுகின்றமை. (தற்போதைய சிறிலங்கா அரசின் பொருளாதாரத் தடை காரணமாக பன்மடங்கு அதிகரித்துள்ளது)
3. இராணுவநடவடிக்கைகள், பொருளாதாரத் தடை, விளைநிலங்களிலிருந்து மக்களின் இடம்பெயர்வு ஆகியவை காரணமாக உள்ளூர் உணவு உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி.
4. மக்கள் நுகரும் உணவு வகைகளின் சத்துப்பெறுமானம் குறைவாகக் காணப்படுகின்றமை.
5. கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், குழந்தைகள், சிறுவர்கள், நோயுற்றோர் ஆகியோருக்கான அதிகரித்த உணவுத்தேவை பூர்த்தி செய்யப்படாமை.
6. மக்களின் உணவுப்பழக்க வழக்கங்களிலுள்ள குறைபாடுகள், அறியாமை, மூடநம்பிக்கைகள் என்பவை பிரதான பங்குவகிக்கின்றன.

இந்தப்பிரச்சினைகளைப் பொறுத்தவரை தவிர்க்க முடியாத போர்ச்சூழ்நிலை ஒன்றைத்தவிர ஏனைய பிரச்சினை யாவற்றையும் நன்கு திட்டமிடப்பட்ட செயற் திட்டங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதன் மூலம் வெற்றிகொள்ளமுடியும்.

முன்னர் குறிப்பிட்டது போல் எமது விடுதலைக்கான கட்டுமானப் பணியில் உறுதியை பேணுவதற்கு தூண்களை அமைக்க வேண்டுமானால், அவற்றுள் முக்கியமான உடல் உள வலுப்பாதுகாப்பை நிறுவ வேண்டுமானால், இதன் மூலமாக ஆரோக்கியமான மக்களை, நாட்டை நிர்மாணிக்க வேண்டுமானால்,

கொண்டு வரையப்பட்டுள்ளது.

1. உள்ளூர் உணவு உற்பத்தியை சுயதேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு ஊக்குவித்தல்.
2. மக்களிடையே சத்துணவு பற்றி இருக்கின்ற அறியாமையைக் களைந்து உள்ளூர் உணவுகளில் இருந்தே அதிக சத்துப்பெறுமானமுள்ள உணவுகளைத் தயாரித்து உட்கொள்ளத் தூண்டுவதன் மூலம் சத்துணவின்மையை கணிசமான அளவினால் குறைத்தல்.
3. உணவுப் பொருள்களை பதப்படுத்தல், சேமித்தல், சந்தைப்படுத்துதல் என்பவற்றில் மக்களையும், மக்கள் நிறுவனங்களையும் தூண்டுவதன் மூலம் காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் உணவுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல்.
4. மக்களிடையே சத்துணவுச் சீராக்கல் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைக்குக் கொண்டு வருவதன் மூலம் சுகாதார வசதிகள் குறைந்த காலகட்டத்திலும், ஆரோக்கியமான மக்களை, சமூகத்தைக் கட்டியெழுப்புதலும் அதன் மூலம் ஒரு வளமான நாட்டினை உருப்படுத்துதலும்.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக குறிப்பிட்ட ஒரு மாத காலத்தினுள் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தைத் தேர்ந்தெடுத்து துரித நடவடிக்கைகளை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மக்கள் அதிகளவில் இடம்பெயர்ந்து அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்ற வலிகாமக் கோட்டப் பகுதியில் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி முதல் வாரத்தில் இத்திட்டம் பற்றிய கருத்துக்களைத் தொடர்பு ஊடகங்களுடாக மக்களுக்கு எடுத்துச் செல்லவும் இரண்டாம் வாரத்தில் சமுதாயத்தின் நாளைய தலைமுறையினரான மாணவர்களுக்கும், சிறார்களின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கட்கும் இத்திட்டத்தின் இல

## எப்படி மறப்போம் தாயே?

தென் தமிழ் ஈழத்தில் எழுந்த
தீச்சுவாலை... நீ!
தீந்தமிழர் நெஞ்சிலிருந்து
தெறிக்கும்... கனல் நீ!

காலடியில் கிடக்கும்
காளான் கூட - உன்
பெயரைக் கேட்டதும்
ஓரடி வளர்ந்து விடுகிறது!...
உறுதியினால்!...

'தாய்' என்பவள்
வீட்டுக்கு மட்டும்
விருந்தாகும் பொருளல்ல;
நாட்டுக்காக உயிரை விடவும்
சித்தமுள்ள...
இலட்சியப் பெண் - என்பதை
நாட்டியவள் நீ !
ஆம்..! அதனால்தான்...
பூட்டிய விலங்கு..
உடைக்கப்படுகிறதோ?

அன்னையே!
புழுதியில் கிடந்த புதல்வர்களை
புரட்டி எழுப்பியவள்.. நீ!
அதனால் தான்...
புரட்சிப் பாதையில் - உன்
பாதங்களை...
இரத்த முள்ளால்
குத்திக் கொண்டாய் போலும்?
'பயம்' என்னும்
பயங்கர நகங்களால்
எங்கள் முகங்களை...
நாங்களே...
குத்திக் கொண்டிருந்த போது...
அதில்...
சிந்திய...
இரத்தத் துளிகளில் இருந்து
எழுந்து வந்தவள் நீ !

அதனால்தான் போலும்
அந்நிய நாடு - எம்
இரத்தச் சுவடுகளைக் கண்டு
அலறி ஓடியது?...

சதைத்துண்டுகளால் - இந்த
மண்ணுக்கு வேலியிடும்...
விதைகளைச் சுமப்பதால்தான்
எமது நாட்டில்..
அந்நிய அலைகள்...
நுழைய முடியவில்லை!
அதற்கு... ஆதாரமாக...
திலீபனையும்...
உன்னையும் போன்ற
வரலாற்றுக் கரைகள்
வழிமறித்து...
நிற்கின்றன!

அன்னையே!
வீடென்னும்..
எல்லைக்குள் நின்று..
உன்னை தேடுவோருக்கு... நீ
கூறிய வார்த்தை...
''நாடு தான் என்... வீடு - அதன்
நிழல்தான்...
என் உயிர்''... என்பதாகும்!

எத்தனை பெரிய
மூத்தான-சத்துள்ள...
இலட்சிய நோக்கு அது?
எப்படித் தாயே
எம்மிதயம் மறக்கும் - உன்

விட்டது எனக் கூறின் அது மிகையில்லாத ஒன்று என்றே தெரிவிக்கலாம்.

இதன் ஒரு கட்டமாகவே தேர்தல் கமிசனிடம் ஜெயலலிதா மீதான ஊழல் குற்றச்சாட்டை விசாரணைக்கெனத் தமிழக ஆளுநர் பீஷ்மன் நாராயண் சிங் அளித்தமையாகும். இவ்விசாரணையை இடை நிறுத்தி வைப்பதற்கான இடைக்கால உத்தரவை உயர் நீதிமன்றத்திடம் இருந்து ஜெயலலிதா பெற்றிருப்பினும் ஜெயலலிதாவின் ஆட்சியைத் தமிழக ஆளுநரின் நடவடிக்கை எச்சரிக்கை செய்துள்ளது, ஏன்? அச்சுறுத்தியுள்ளது என்றே கூறலாம்.

தமிழக ஆளுநரின் இம்முடிவானது ஏதோ சட்டத்தின் மீது அவர் கொண்ட பற்றினாலோ, மக்களின் மீது கொண்டுள்ள அக்கறையினாலோ எழுந்ததல்ல. மத்திய அரசின் கண்ணசைப்பினால் நிகழ்ந்தது. இந்தியாவைப் பொறுத்து ஆளுநர்கள் என்பது அரசியலமைப்பில் உள்ளது போன்று ஜனாதிபதியின் பிரதிநிதிபோல் என்றும் செயற்பட்டது கிடையாது. அவர் மத்தியில் ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் பிரதிநிதிகளே. மத்திய அரசு ஆட்சியில் இல்லாத மாநில அரசுகளை ஆட்டிப் படைப்பவர்கள்.

உண்மையிலேயே தமிழக ஆளுநர் சட்ட ஆட்சியில் அக்கறை கொண்டவராக இருந்திருந்தால் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி ஜெயலலிதா மீதான குற்றச்சாட்டை கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 2-ம் திகதி சமர்ப்பித்தபோதே அதனை விசாரணைக்கு தேர்தல் கமிசனிடம் அனுப்பியிருக்க வேண்டும், அல்லது நிராகரித்து இருக்க வேண்டும். ஆனால் அவர் அதை எதையும் செய்ய வில்லை. கிடப்பில் போட்டிருந்தார்.

சுவாமியினதும், ஏனைய குற்றச்சாட்டுக்கள் – தி. மு.கவும், ஏனைய எதிர்க் கட்சிகளும் சுமத்திய கிரிமினல் குற்றச்சாட்டுக்கள் – யாவற்றையும் கிடப்பில் போட்டார். மனுக்களைக் கொடுத்தவர்கள் வற்புறுத்திய போதும் அவர் கண்டுகொள்ளவில்லை. மாறாக, தற்பொழுது காங்கிரஸ் - அ. தி. மு. க. உறவு முறிவடைந்தது தெளிவாக உறுதியான பின்னர், ஊழல் குற்றச்சாட்டு மனுவை வெளியில் எடுத்துள்ளார். விசாரணைக்குச் சமர்ப்பித்துள்ளார்.

அதாவது ஜெயலலிதா மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களை வெளியில் கொண்டு வர அல்லது ஜெயலலிதாவை மிரட்டிப் பணிய வைக்க நரசிம்மராவ் அரசாங்கம் முடிவு செய்துள்ளது என்பதே இதன் அர்த்தமாகும். இது இந்தியாவிற்கோ அன்றி தமிழகத்திற்கோ புதியதொன்றல்ல. இது இந்தியா 'சுதந்திரம்' பெற்றதில் இருந்து நிகழ்ந்து வரும் வழக்கமான நடவடிக்கை ஆகும்.

இதனை இந்தியப் பிரதமர்கள் நேரு, இந்திரா காந்தி, ராஜீவ்காந்தி மற்றும் சந்திரசேகர் வரை செய்துள்ளார்கள். தற்பொழுது பிரதமர் நரசிம்மராவும் இதனையே செய்ய முற்பட்டுள்ளார்.

இந்நிலையில் ஜெயலலிதா மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அவரின் கழுத்தின் மேல் தொங்கும் கத்தி என்றே சொல்லலாம், இக்கத்தி தொங்கும் கயிற்றை அறுத்துவிடவும் பலர் தயாராக இருக்கின்றனர். ஆகையினால் எவ்வளவுதான் பெரும்பான்மை புலம் இருப்பினும் ஜெயலலிதா தனது ஆட்சியின் நாட்களை எண்ண வேண்டிய காலம் வந்து விட்டது. ஆனால் ஜெயலலிதா இதற்காக எவரையும் நொந்து கொள்வதில் பயனில்லை. ஏனெனில் அவரும் பதவியைக் கைப்பற்ற இதே வழியைக் கையாண்ட ஓர் அரசியல் வாதியே.

தொடர வேண்டியது அவசியமாகிறது.

இந்தவகையில் ஒவ்வோர் துறையினதும் வளர்ச்சியானது நீண்டகால அடிப்படையில் திட்டமிடப்பட்ட செயல் வடிவம் பெற்று வருகின்றன, இவற்றைச் செயற்படுத்துவதில் எதிரியால் ஏற்படுத்தப் படுகின்ற தடைகள் ஓர் இடையூறாக இருக்கின்றபோதும் அதுவே எமது பலமாகவும் என்றும் எங்களிலேயே நாம் தங்கி நின்று வாழக்கூடிய பலமான திட்டங்களை வகுக்கவும் ஏதுவாக அமைகின்றன.

இவ்வாறு நாம் ஒவ்வோர் துறையினதும் வளர்ச்சி பற்றி எடுத்து நோக்கும்போது எமது மக்களின் உடல், உள நலன் பேணும் சுகாதார சேவைகள் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றன.

ஒரு நாட்டின் சுகாதாரம் அல்லது சுகவாழ்வு என்று சொல்கின்றபோதோ அதன் வளர்ச்சி என்கின்ற போதோ அந்தத் தேசத்தின் ஒவ்வோர் குடிமகனும் உடல், உள ஆரோக்கியமும் அதனாலே கட்டியெழுப்பப்படுகின்ற சமூக ஆரோக்கியமுமே கருதப்படுகிறது. ஒரு மனிதனின் உடல் உள ஆரோக்கியம் சிறப்பாக அமைய வேண்டும் எனின் அவனது அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் என்பன உரியவகையில் கிடைக்க வேண்டும். ஒரு மனிதனின் இந்த அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப் படும் போதே அவன் கல்வி கலாசாரம், கலைகள் மற்றும் துறைசார்ந்த வளர்ச்சி பற்றி சிந்திக்கவும் அவற்றை வளர்க்கவும் அதனால் பூரண மான சுகவாழ்வையும் பெறத் தலைப்படுகின்றான். இந்த

குறைபாடுகள், அறியாமை, மூட நம்பிக்கைகள் என்பவை பிரதான பங்குவகிக்கின்றன.

இந்தப்பிரச்சினைகளைப் பொறுத்தவரை தவிர்க்க முடியாத போர்ச்சூழ்நிலை ஒன்றைத்தவிர ஏனைய பிரச்சினை யாவற்றையும் நன்கு திட்டமிடப்பட்ட செயற் திட்டங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதன் மூலம் வெற்றிகொள்ளமுடியும்.

முன்னர் குறிப்பிட்டது போல் எமது விடுதலைக்கான கட்டுமானப் பணியில் உறுதியை பேணுவதற்கு தூண்களை அமைக்க வேண்டுமானால், அவற்றுள் முக்கியமான உடல் உள வலுப்பாதுகாப்பை நிறுவ வேண்டுமானால், இதன் மூலமாக ஆரோக்கியமான மக்களை, நாட்டை நிர்மாணிக்க வேண்டுமானால், இன்றே நீண்ட எதிர்கால நோக்கில் திட்டமிடப்பட்ட உணவு உற்பத்தியை எமது பிரதேசத்தினதும் பண்பாட்டினதும் அடிப்படையில் செயலுருப் பெறச் செய்யவேண்டும்.

இதன் அடிப்படையிலே தமிழீழத்தின் பல்வேறு துறை சார்ந்த அமைப்புகளும் திட்டமிட்டு செயற் திட்டங்களை ஆரம்பித்துவருகின்றன. அவற்றுள் ஒன்றாகவே தமிழீழ மருத்துவத்துறை சார்ந்த நிறுவனங்கள் ஏனைய துறைகள் அமைப்புகளின் அனுசரணையுடன் உணவுப்பிரச்சினையின் பிரதான பக்கமாக விளங்கும் சத்துணவின்மையைகளைகின்ற நோக்குடன் ஒருங்கிணைந்த சத்துணவுச் சீராக்கல் திட்டம் ஒன்றை வரைந்துள்ளன.

இத்திட்டமானது பின்வரும் இலக்குகளை குறியாகக்

மாக குறிப்பிட்ட ஒரு மாத காலத்தினுள் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தைத் தேர்ந்தெடுத்து துரித நடவடிக்கைகளை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மக்கள் அதிகளவில் இடம்பெயர்ந்து அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்ற வலிகாமக் கோட்டப் பகுதியில் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி முதல் வாரத்தில் இத்திட்டம் பற்றிய கருத்துக்களைத் தொடர்பு ஊடகங்களுடாக மக்களுக்கு எடுத்துச் செல்லவும் இரண்டாம் வாரத்தில் சமுதாயத்தின் நாளைய தலைமுறையினரான மாணவர்களுக்கும், சிறார்களின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கட்கும் இத்திட்டத்தின் இலக்குகளின் அடிப்படையிலான கருத்தரங்குகள் நடாத்தப்படவும் இதன் பின்னர் இருவார காலப் பகுதியில் இக்கருத்தரங்குகளில்கலந்துகொண்டவர்கள் மூலமாகச்சத்துணவின்மையும், அதனை தடுத்தலும் பற்றிய கருத்துக்கள் மக்கள் மத்தியில் எடுத்து சொல்லப்படுவதுடன் மக்களை உணவு உற்பத்தியில் ஊக்குவிக்கும் முகமாக விதைகள், கன்றுகள் என்பனவும் வழங்கப்படவும் உள்ளன.

இதன் பின்னரும் இத்திட்டத்தின் மீதான தொடர்ந்த கண்காணிப்பின் மூலமும், விரிவாக்கலின் மூலமும் ''சத்துணவின்மை'' எனும் குறைபாட்டினைக் கணிசமான அளவு குறைக்கலாம் என்றும் இதன் மூலம் ஆரோக்கியமான, உறுதியான ஒரு நாட்டைக் கட்டியெழுப்பலாம் என்றும் உறுதியாகக் கூறலாம்.

அந்நிய அலைகள்....
நுழைய முடியவில்லை!
அதற்கு... ஆதாரமாக...
திலீபனையும்...
உன்னையும் போன்ற
வரலாற்றுக் கரைகள்
வழிமறித்து...
நிற்கின்றன!

அன்னையே!
வீடென்னும் ..
எல்லைக்குள் நின்று ..
உன்னை தேடுவோருக்கு... நீ
கூறிய வார்த்தை...
''நாடு தான் என்... வீடு - அதன்
நிழல்தான்...
என் உயிர்''... என்பதாகும்!

எத்தனை பெரிய
மூத்தான-சத்துள்ள...
இலட்சிய நோக்கு அது?
எப்படித் தாயே
எம்மிதயம் மறக்கும் - உன்
தியாக...
வழியின் தடத்தினை?

-கவிஞர் மு.வே.யோ. வாஞ்சிநாதன்

## வளைகுடாப் போர்

# நஷ்ட ஈடு குறித்து ஆராய ஐ. நா. குழுக்கள் நியமனம்

ஈராக் குவைத் மீது 1990-ம் ஆண்டு மேற்கொண்ட படையெடுப்பினால் பாதிக்கப்பட்டவர்களுக்குநட்டஈட்டு கொடுப்பனவு தொடர்பான 10 லட்சத்திற்கும் அதிகமான கோரிக்கைகள் பற்றி ஆராய ஐ. நா நட்டஈட்டு ஆணைக்குழு நிறுவனங்களைக் கொண்டமூன்று குழுக்களை நியமித்துள்ளது.

வெளிநாட்டு தொழிலாளர்கள்போன்றதனிமனிதர்களின் நட்ட ஈட்டுக் கோரிக்கைகளை இக்குழுக்கள் ஆராயவுள்ளன.

ஆணைக்குழு இது தொடர்பாக 7 லட்சம் விண்ணப்பங்களைப் பெற்றுள்ளது.

எனினும் இக்கோரிக்கையை ஒரு கோடியே இருபது லட்சமாக அதிகரிக்கும் என்றும் நட்ட ஈட்டுப் பெறுமதி 10 ஆயிரம்கோடி அமெரிக்க டாலராக இருக்கும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

## ரஷ்யா செல்லும் இலங்கையர் அதிகரிப்பு

(மொஸ்கோ)

ரஷ்யாவிற்குள் களவாகப் புகும் இலங்கையர் தொகை அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மார்ச் மாதத்தில் மட்டும் மொஸ்கோ பொலீஸார் ரஷ்சியாவிற்குள் பிரவேசிக்கும் சட்டவிதிகளை மீறிய 1139 வெளி நாட்டவர்களை கைது செய்துள்ளனர். இவர்களில் 293 பேர் இலங்கையர்களாவர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் அமரர் ஈ. கே. குமரையா ஞாபகார்த்தமாக யாழ். உதைப்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்திவந்த உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியில் இறுதி சாம்பியன் மோதல் நாளை ஞாயிற்றுக் கிழமை அரியாலை மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி சாம்பியன் மோதலில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகமும்சென்றோக்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (42)

[யாழ்ப்பாணம்]

நாவாந்துறை சென் மேரீஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டப்போட்டி இன்றுபி.பநாவாந்துறைகலைவாணிமைதானத்தில்நடைபெறும்3.30மணிக்குநடைபெறும் போட்டியில் அராலி அண்ணா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மணிப்புரி 'ஐ' விளையாட்டுக்கழகம்மோதும். தொடர்ந்து 4.30மணிக்கு நடைபெறும் போட்டியில் புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கெற்பலி பண்டிதர் குடியிருப்புவிளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (22)

முன்னாள் அமைச்சர்கள்

## ஆயுதம் வைத்திருக்க தொடர்ந்தும் அனுமதி

(கொழும்பு)

முன்னாள்முதலமைச்சர்கள், அமைச்சர்கள் தமது பாதுகாப்புக்கருதி வழங்கப்பட்ட ஆயுதங்களை தொடர்ந்து வைத்திருக்க முடியும் என சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது. கலைக்கப்பட்ட மாகாணசபை முதலமைச்சர்கள் மற்றும் அமைச்சர்களின் பாதுகாப்புக்கருதி அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள ஆயுதங்களை எடுத்துச் செல்லவும் முடியும். இதேவேளை மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியீடும் அபேட்சகர்கள் தமக்கு பாதுகாப்பு வேண்டி கோரிக்கை விடுத்தால் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கான ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அமைச்சரவைப்பேச்சாளர் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

## குப்பைக் கூடைக்குள் குழந்தை

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானநிலைய குப்பை வண்டிக்குள் அநாதரவாகக் கிடந்த குழந்தை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கொழும்புசர்வதேச விமான நிலையத்தில் கடந்த வியாழன் அதிகாலை குப்பை வண்டி ஒன்றிற்குள் பச்சிளம் குழந்தை ஒன்று கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

ஈழநாதம்

## கம்பன் விழா - 1993 2-ம் நாள் நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் நடைபெற்று வரும் கம்பன் விழாவின் இரண்டாவது நாளான இன்று காலை 9 30 மணிக்கு 'சுழலும் சொற்போர்' எனும் நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது.

மாலை 4-30 மணிக்கு மங்கள இசையுடன் ஆரம்பமாகும் நிகழ்ச்சிகளில் பட்டி மண்டபம் சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறவுள்ளது.

## கல்வி அபிவிருத்திக்கழக ஆசிரியர் கருத்தரங்கு

(பருத்தித்துறை)

கல்வி அபிவிருத்திக் கழக ஆரம்ப ஆசிரியர்களுக்கான கல்விக் கருத்தரங்கு எதிர் வரும் 8-ம், 10-ம் திகதிகளில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கிலே கல்வி அபிவிருத்திக் கழக ஆரம்ப ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வடமராட்சி பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு.ச.செல்லத்துரை அறிவித்துள்ளார். (25)

## உயர்தர மாணவருக்கான கல்விக் கருத்தரங்கு

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதி விஞ்ஞான உயர்வகுப்பு மாணவர்களுக்கான கல்விக்கருத்தரங்கு ஒன்று பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியில் வடமராட்சி கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. ச. செல்லத்துரை தலைமையில் நாளைமறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கிலே திரு. க. கந்தசாமி கரு துணிக்கைகள் பற்றியும், திரு. ச. சிவபாலன் இரசாயனமும் மனித சூழலும் பற்றியும், திரு. ச. சற்குணராஜா கணிதம் வெளித்தோற்றம் பற்றியும் கருத்துரைகளை வழங்குவார்கள். (25)

## ஜெய்ப்பூர்செயற்கைஅவயவ பாவனையாளர் கூட்டம்

செயற்கை அவயவ பாவனையாளர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று காலை 9 மணிக்கு இல. 5. பழைய பூங்கா வீதி ஜெய்ப்பூர் செயற்கை அவயவ தொழிற்சாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. புதிய நிர்வாக சபை அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவதுடன், புனர்வாழ்வு பற்றிய கலந்துரையாடலும் இடம்பெறும் என மேற்படி சங்க செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

### பயிலுனர் ஆசிரியர் கூட்டம்

(பருத்தித்துறை)

அரசாங்கத்தினால் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புகொடுப்பனவு, பண்டிகை முற்பணம் இவ்வருட சம்பள உயர்வு என்பன பயிலுனர் ஆசிரியர்களுக்கு வழங்கப்படாமை பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பது தொடர்பான பயிலுனர் ஆசிரியர்களுக்கான கூட்டமொன்று எதிர்வரும் ஆறாம் திகதி செவ்வாய்க்கிழமை அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில்

## நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிருவாக சேவை தரம் 1 பதவி உயர்வு பெறுவதற்கான நேர்முகப் பரீட்சை ஏப்பிரல் மூன்றாம் கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளதாக யாழ் அரச அதிபர் அறிவித்துள்ளார்.

மேற்படி நேர்முகப் பரீட்சைக்கு வகுப்பு II தரம் I இல் இருப்பவர்கள் பங்குபற்றுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

### கலந்துரையாடல்

கொழும்பிலிருந்து வரும் சர்வதேச செஞ்சிலுவைதூதுக்குழு இலங்கை செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களுடன் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஒரு கலந்துரையாடலையும் பிற்பகல் 2 மணிக்குத் தொண்டர்களுடனான கூட்டம் ஒன்றையும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைமையகத்தில் நடாத்தவுள்ளது. இக்கூட்டத்திற்கு உறுப்பினர்கள், தொண்டர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், முக்கியஸ்தர்கள் ஆகியோரை வருகைதருமாறு யாழ். கிளைத் தலைமையலுவலகம் அழைப்பு விடுத்துள்ளது.

### பொதுக்கூட்டம்

பன்னாலை மகளிர் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க வருடாந்த பொதுக் கூட்டமும் ஓராண்டு பூர்த்தி விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

## நல்லூரில் கம்பன் விழா நேற்று ஆரம்பம்

கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழாவின் முதல்நாள் நிகழ்ச்சிகள் நேற்றுப் பிற்பகலில் ஆரம்பமாகின. கம்பன் கோட்டத்திலிருந்து மங்கள வாத்தியங்கள் கானமழை பொழிய, மகளிர் பூரண கும்பங்களுடன் அணிவகுத்துச் செல்ல, குடை, கொடி, ஆலவட்டங்கள் சகிதம் கம்பன் திருவுருவப்படம் அறிஞர் பெருமக்களால் ஊர்வலமாக விழா மண்டபத்திற்கு எடுத்

தேசிய இனமாக கணிக்கப்படுவதற்கு பிரதேசமும் மொழியும்பாதுகாக்கப்படவேண்டும். கலை மற்றும் பண்பாடுகள் பேணப்படல்வேண்டும் வரலாறு போற்றப்படவேண்டும். ஆக்கிரமிக்கப்படும் எமது பிரதேசத்தைக் காப்பாற்ற வேண்டியது தமிழர்களின் கடமை. அதேபோல கலை, பண்பாடு போன்றவற்றையும் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். தும்பளை

**மத்திய பிரதேசத்தில்**

# பாரதீய ஜனதா ஆட்சியை கலைத்தமை தவறானது

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

கடந்த டிசம்பரில் அயோத்தியில் மசூதி இடிக்கப்பட்டதை அடுத்து இந்திய மத்திய அரசினால் மத்தியபிரதேச பாரதீய ஜனதா அரசு கலைக்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சி அங்கு பிரகடனம் செய்யப்பட்டது தவறானது என மத்திய பிரதேச உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

எனினும் இத்தீர்ப்பு குறித்து மத்திய அரசு மேன்முறையீடு செய்யும் வகையில் இரு வாரங்களுக்கு இத்தீர்ப்பை அமுல் செய்வதை நீதிமன்றம் நிறுத்தி வைத்திருக்கின்றது. அயோத்தி சம்பவத்தை அடுத்து அம்மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது என ஆளுநர் சமர்ப்பித்த அறிக்கை அங்கு ஜனாதிபதி ஆட்சியை பிரகடனம் செய்ய சரியான காரணம் இல்லை என உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து காங்கிரஸ் வட்டாரங்கள் கருத்து கூற மறுத்துவிட்ட போதிலும், ஜனாதிபதியின்பிரகடனத்தை உயர் நீதிமன்றம் தடைசெய்ய முடியாது என அவ்வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

அயோத்தி பாபரி மசூதி இடிப்பிற்கு பின்னர் பாரதீய ஜனதா ஆட்சியிலிருந்த நான்கு மாநில அரசுகள் மத்திய அரசினால் கடந்த டிசம்பரில் கலைக்கப்பட்டு அங்கு ஜனாதிபதி ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# இந்திய தொலைக்காட்சி தவறான பிரசாரம்

## - ஜெயலலிதா குற்றச்சாட்டு

(சென்னை)

''தமிழக சட்டப் பேரவையில் ஆளும் அ.தி.மு.க எதிர்க் கட்சிகளை அடக்கி, ஒடுக்கி மிரட்டுவது போன்ற ஓர் தவறான பிரமையை ஏற்படுத்தும் முகமாக பத்திரிகைகளும் இந்தியத் தொலைக்காட்சியும் செய்தி வெளியிடுகின்றன.'' இவ்வாறு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று சட்டப் பேரவையில் குற்றஞ்சாட்டினார்.

செய்தித்துறை மானியகோரிக்கை மீதான விவாதத்தின் இறுதியில் பேசிய ஜெயலலிதா காங்கிரசும் தி.மு.கவும் சட்டப்பேரவை நடவடிக்கைகளை ஒழுங்காக நடாத்த முடியாத அளவுக்கு குழப்புகின்றன ஆனால் பத்திரிகைகளும் தொலைக்காட்சியும் செய்தி வெளியிடும் போது, ஏதோ அவர்கள் செய்வதே சரி என்பது போல் குறிப்பிடுகின்றன என குற்றஞ்சாட்டினார்.

சுயேட்சை உறுப்பினர் தாமரைகனிக்கும் அ.தி.மு.கவிற்கும் எந்த தொடர்பும் இல்லை ஆனால் அவருக்கும் எமக்கும் தொடர்பிருப்பதாக தவறான செய்திகள் வெளியிடப்படுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்,

## 1900 கிலோ வெடிமருந்து பம்பாயிலிருந்து மீட்பு

### பொலிசார் அறிவிப்பு

[டில்லி]

1900 கிலோ நிறையுடைய வெடிமருந்துகளை பம்பாய் பொலிசார் நேற்றுமறைவிடம் ஒன்றிலிருந்து மீட்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதே சமயம் கடந்தமாத பம்பாய் குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக இதுவரை 44 பேர் கைதாகியுள்ளனர்.

## சித்த வைத்தியத்தால் எயிட்ஸை குணப்படுத்தலாம்

### தமிழக மருத்துவர்கள் தெரிவிப்பு

(சென்னை)

சித்த வைத்தியத்தின் மூலம் எயிட்ஸ் நோயினைக் குணப்படுத்தமுடியும் என்று தமிழக மருத்துவர்கள் கூறியுள்ளனர். இது தொடர்பாக பதின்நான்கு நோயாளர்கள் பரீட்சித்துப்பார்க்கப்பட்ட தாகவும் திருப்திகரமாக முன்னேற்றம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சித்த மருத்துவத்தின் மூலம் லேகியம், சூரணம் போன்ற மருந்து வகைகள் பயன் படுத்தப்பட்டதாகவும் டாக்டர் ராதாகிருஷ்ணன் தலைமையிலானடாக்டர் குழுவொன்று சித்த மருத்துவம் மூலம் எயிட்ஸ் நோய் சிகிச்சை பற்றிஆராய்ந்து வருவதாகவும்

கல்வியை

இருப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

### உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடாத்தும் அமரர் ஈ. கே. குமரையா ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சம்பியன் ஆட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு அரியாலை மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடும் மீன் அணி, சென் றோக்ஸ் அணியை எதிர்த்து விளையாடும்.

### நியமனம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அலுவலகத்திற்கு திட்டமிடல் உதவிப் பணிப்பாளராக திருமதி நா. சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் யாழ். செயலகதிட்டமிடல் பிரிவில் கடமையாற்றி வந்தவராவார்.

### 50,000 ரூபா உதவி

(குருநகர்)

யாழ் - போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்ட ஒரு தொகுதி மருந்து பொருள்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களிடம் நிதி கோரியதை அடுத்து யாழ் - மறைவட்ட மனித முன்னேற்ற நடு நிலையம் ஐம்பதாயிரம் ரூபாவை வழங்கியுள்ளதாக நிலைய இயக்குநர் வண. ம. இ.பயஸ் அடிகள் தெரிவித்தார். [21]

### அவதானிப்புக்குழு கொழும்பு வந்தது

(கொழும்பு)

சர்வதேச அவதானிப்புக் குழு ஒன்று நேற்று முன்தினம் கொழும்பு வந்து சேர்ந்தது.

மாகாணசபை தேர்தலுக்கான நியமனப்பத்திரங்களை அவதானிப்பதற்காகவே அறுவர் அடங்கிய சர்வதேச அவதானிப்பாளர் குழு கொழும்பு வந்துள்ளது என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அபிவிருத்திக்கு நிதி வழங்க

## மனித உரிமை மீறலை நிபந்தனையாக்க கூடாது

### பாங்கொக் மாநாட்டில் தீர்மானம்

[பாங்கொக்]

அபிவிருத்திக்கான நிதி வழங்கவோ அல்லது அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தவோ மனித உரிமை மீறல் சம்பவங்களை ஓர் நிபந்தனையாக வைக்கும் மேற்குலக நாடுகளின் போக்கை மனித உரிமைகளுக்கான தென்கிழக்காசிய சங்கம் கண்டித்துள்ளது.

மனித உரிமை தொடர்பான ஆசிய நாடுகளின் பாங்கொக் மாநாட்டில் இப் பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் நடைபெறவுள்ள மனித உரிமைகள் மாநாட்டில் இப் பிரேரணை பரிசிலனைக்கு வைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இதேசமயம் ஆசிய சங்கத்தின் பிரேரணையை லண்டனில் உள்ள சர்வதே மனித உரிமை குழு கண்டித்துள்ளது. உள்நாட்டுப் பிரச்சினையில் மனித உரிமை என்ற பெயரில் வெளிநாடுகள் தலையிடக் கூடாது என்று ஆசிய பசுபிக் மாநாட்டு பிரேரணையை

பாவனையாளர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று காலை 9 மணிக்கு இல. 5. பழைய பூங்கா வீதி ஜெய்ப்பூர் செயற்கை அவயவ தொழிற்சாலை மண்டபத்தில் நடை

## பயிலுனர் ஆசிரியர் கூட்டம்

(பருத்தித்துறை)

அரசாங்கத்தினால் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புகொடுப்பனவு, பண்டிகை முற்பணம் இவ்வருட சம்பள உயர்வு என்பன பயிலுனர் ஆசிரியர்களுக்கு வழங்கப்படாமை பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பது தொடர்பான பயிலுனர் ஆசிரியர்களுக்கான கூட்டமொன்று எதிர்வரும் ஆறாம் திகதி செவ்வாய்க்கிழமை அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு வடமராட்சியிலுள்ள சகல பயிலுனர் ஆசிரியர்களையும் சமுகமளிக்குமாறு வடமராட்சி பயிலுனர் ஆசிரியர் சங்க செயலாளர் திரு. க. ஸ்ரீசந்திரன் அறிவித்துள்ளார். (25)

## மணவாளக்கோல விழா

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய மணவாளக்கோல விழாநாளைமறுதினம்திங்கட்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும்.

அன்று 1008 சங்காபிஷேகமும் ஐந்து பரிவார மூர்த்திகளுக்கு ஸ்நபன அபிஷேகமும் இசை நிகழ்ச்சிகளோடு ஆனந்தக் காவடியும் இடம் பெறும்.

## குடிசை தீக்கிரை

(வடமராட்சி)

திடீரென ஏற்பட்ட தீ விபத்தினால் 25 அந்தர் வெங்காயமும், குடிசையும் முற்றாகத் தீப்பிடித்து எரிந்து சாம்பராகியது.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை கரவெட்டி வதிரியில் நடைபெற்றது. (யோ)

சபை அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவதுடன், புனர்வாழ்வு பற்றிய கலந்துரையாடலும் இடம்பெறும் என மேற்படி சங்க செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

டாந்த பொதுக் கூட்டமும் ஓராண்டு பூர்த்தி விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

காங்கிரசும் தி. மு. கவும் சட்டப்பேரவை நடவடிக்கைகளை ஒழுங்காக நடாத்த முடியாத அளவுக்கு குழப்புகின்றன ஆனால் பத்திரிகைகளும் தொலைக்காட்சியும் செய்தி

வெடிமருந்துகளை பம்பாய் பொலிசார் நேற்றுமறைவிடம் ஒன்றிலிருந்து மீட்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதே சமயம் கடந்தமாத பம்பாய்

அபிவிருத்திக்கு நிதி வழங்க

# நல்லூரில் கம்பன் விழா நேற்று ஆரம்பம்

கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழாவின் முதல்நாள் நிகழ்ச்சிகள் நேற்றுப் பிற்பகலில் ஆரம்பமாகின. கம்பன் கோட்டத்திலிருந்து மங்கள வாத்தியங்கள் கானமழை பொழிய, மகளிர் பூரண கும்பங்களுடன் அணிவகுத்துச் செல்ல, குடை, கொடி, ஆலவட்டங்கள் சகிதம் கம்பன் திருவுருவப்படம் அறிஞர் பெருமக்களால் ஊர்வலமாக விழா மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வடக்கு வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் விசேட விழாப் பந்தலின் முன்பாக அணிவகுத்து நின்ற மகளிர் மலர் தூவி வரவேற்க யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம், யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் துரைராசா, பேராசிரியர் சண்முகதாஸ், மற்றும் மதத் தலைவர்கள், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, மற்றும் அறிஞர்கள் மாநாட்டுப் பந்தலினுட் பிரவேசித்தனர்.

இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கத்தின் கடவுள் வாழ்த்துப் பாடல்களைத் தொடர்ந்து மாவை ஆதீனம் ஷண்முகநாதக் குருக்கள், நல்லை ஆதீனம் சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், தென்னிந்திய திருச்சபை ஆயர் டி. ஜே. அம்பலவாணர், யாழ்ப்பாண பேராலய பங்குத் தந்தை ஜெபநேசன் ஆகியோர் ஆசியுரைகளை வழங்கினர்.

விழாவிற்கு தலைமையேற்று உரைநிகழ்த்திய துணைவேந்தர் துரைராசா, தமிழினம் தேசிய இனமாக கணிக்கப்படுவதற்கு பிரதேசமும் மொழியும்பாதுகாக்கப்படவேண்டும். கலை மற்றும் பண்பாடுகள் பேணப்படல்வேண்டும் வரலாறு போற்றப்படவேண்டும். ஆக்கிரமிக்கப்படும் எமது பிரதேசத்தைக் காப்பாற்ற வேண்டியது தமிழர்களின் கடமை. அதேபோல கலை, பண்பாடு போன்றவற்றையும் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். தும்பளை க. கிருஷ்ணபிள்ளை நமசிவாய தேசிகர், மு.கந்தையா, ச. பொன்னுத்துரை, க. சச்சிதானந்தம்' சிரித்திரன் சிவஞானசுந்தரம் ஆகிய சான்றோர்கள் கௌரவிக்கப்பட்டதைத் தொடர்ந்து கம்பன் கழக அமைப்பாளர் ஜெயராஜின் வரவேற்புரை இடம் பெற்றது.

சமுதாயத்தின் பொறுப்புடையவர்கள் - பல்கலைக்கழகம் போன்ற முன்னணி நிறுவனங்கள் இத்தகையவர்களை கௌரவிக்கும் கடமையை செய்ய முன்வராதபோது, மக்களின்ஒத்துழைப்புடன் கம்பன் கழகம் இப் பணியை முன்னெடுத்ததாக கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் வரவேற்புரையை நிகழ்த்தும் போது குறிப்பிட்டார்.

அதையடுத்து மண்டப வாசலில் யாழ். மாநகர ஆணையாளரால் வரவேற்கப்பட்ட வைத்திய கலாநிதி சிவகுமாரன்,குடைகொடி.ஆலவட்டம், சகிதமாக சீருடன் மேடைக்கு அழைத்துவரப்பட்டார்.

அதைத்தொடர்ந்து தங்கப் பதக்கம் சூட்டப்பட்டு, செங்கோல் அளிக்கப்பட்டதுடன் மகர யாழ். விருதும் வழங்கப்பட்டது.

இவ் விருதைப் பெற்றுக் கொண்ட வைத்திய கலாநிதி சிவகுமார்பதிலுரை நிகழ்த்தும் போது, இலக்கியம் என்பது வெறுமனே ரசனைக்கும், பொழுதுபோக்கிற்கும் உரியதல்ல . அது வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் விளங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இலக்கிய நயமாகவும், பழந்தமிழ் கவிதைகளை மேற்கோள் காட்டியும் உரை நிகழ்த்திய வைத்திய கலாநிதி சிவகுமார், தமக்கு வழங்கப்பட்ட விருதை வைத்திய சாலைக்கு வழங்குவதாக அறிவித்தார். அதைத் தொடர்ந்து வைத்தியசாலை பணிப்பாளர் மேடையில் வைத்து அதனைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.


ஸ்ரீதர் திரையரங்கில்...

"தமிழோசை"

தினசரி மாலை

4 மணிக்கும் 6 மணிக்கும்

காண்பிக்கப்படுகிறது

(ஞ/6323)



இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம், இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# சித்த வைத்தியத்தால் எயிட்ஸை குணப்படுத்தலாம்

### தமிழக மருத்துவர்கள் தெரிவிப்பு

(சென்னை)

சித்த வைத்தியத்தின் மூலம் எயிட்ஸ் நோயினைக் குணப்படுத்தமுடியும் என்று தமிழக மருத்துவர்கள் கூறியுள்ளனர். இது தொடர்பாக பதினான்கு நோயாளர்கள் பரீட்சித்துப்பார்க்கப்பட்டதாகவும் திருப்திகரமாக முன்னேற்றம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சித்த மருத்துவத்தின் மூலம் லேகியம், சூரணம் போன்ற மருந்து வகைகள் பயன் படுத்தப்பட்டதாகவும் டாக்டர் ராதாகிருஷ்ணன் தலைமையிலானடாக்டர் குழுவொன்று சித்த மருத்துவம் மூலம் எயிட்ஸ்நோய் சிகிச்சை பற்றிஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### கல்வியை

இருப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை முதலாம் ஆண்டு, தமது பிள்ளைகளை சேர்க்கும் போது தாம் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாக அப் பெற்றோர் மேலும் தெரிவித்தனர் (நி)

### கொழும்பில்

யாழ்ப்பாணம் வரும் எல்லா கப்பல்களிலும் தபால் பொதிகளை அனுப்புவது என்று சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க வடமாகாண பிரதம தபால் அத்தியட்சகர் திரு சேதுகாவலருக்கு உறுதிமொழி அளித்திருந்தமை தெரிந்ததே. எனினும் அதன் பின்னர் மூன்று கப்பல்கள் வந்தபோதிலும் எந்த ஒரு கப்பலிலும் தபால் பொதிகள் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும் [நி]

### தெரிவுக்குழுவின்

பிரிவினைக்குத் தூபம் போடுகின்றன. கலாசார பண்பாட்டு, சமூக நிலைகள்தான் இனப்பிரச்சினைக்கான அடிப்படைக் காரணங்கள்என்றார்.

தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசுகையில், இனப்பிரச்சினை இல்லை என்று சிலர் கூறுகிறார்கள் அல்லது என்ன பிரச்சினை என்கிறார்கள். கடந்த ஐம்பது வருடங்களாக தமிழர் பிரச்சினை இருந்து வருகிறது. தமிழர்களுக்கு நியாய பூர்வமான குறை இருப்பதைபெரும்பான்மைச் சமூகம் ஏற்றுக் கொள்கிறதா? அப்படி ஒரு பிரச்சினை இருப்பதை பெரும்பான்மைச் சமூகம் ஏற்றுக் கொள்வதாக இல்லை. அரசும் எதிர்க்கட்சியும் காலம் கடந்தும் கூட இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை முன்வைக்கத் தயாராக இல்லை. அவர்களுக்கு இன்றுள்ள முக்கிய பிரச்சினை சுதந்திரக் கட்சி - யு. என்.பி. கெடுபிடி யுத்தமாகும் என்றார்.

# ஐ. நா. தடையை மீறும் விமானங்களை சுட அனுமதி

(சரஜேவோ)

உள்நாட்டுப்போர் நிகழ்ந்து கொண்டிருக்கும் பொஸ்னியாவின் வான்பரப்பில் அமெரிக்க நேசப்படைகளின் போர் விமானங்கள் அவதானிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு நேட்டோ இராணுவ அதிகாரிகள் திட்டங்களை நேற்று பூர்த்தி செய்தனர்.

இதன்படி பொஸ்னிய வான் எல்லைக்குள் செல்வதை தடை செய்யும் ஐ நாவின் தடையை மீறும் விமானங்கள் அமெரிக்க நேசப்படைகளின் போர் விமானங்களால் சுட்டு வீழ்த்தப்படும்.

பொஸ்னியாவில் முஸ்லிம்கள் மீது சேர்பியர்களின் போர் விமானத்தாக்குதல் அண்மைக்காலம்வரை கடுமையாக இருந்து வந்தமை தெரிந்ததே.

### சிறிலங்கா

மில் இராணுவ பயிற்சியை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

அம்பாறை மாவட்டத்தில் இவர்கள் பயிற்சியை பெற்று கொண்டபின்னர் மேலும் பல அணிகள் விரைவில் சேர்த்துக் கொள்ளப்பட இருப்பதாக இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

### தொழிற்

தரவுபடுத்தி தத்தமதுசிகிச்சை நிலையங்களுக்கு வரும்படி நிர்ப்பந்திப்பதை அவதானிக்க முடிகிறது.

மேலும், அந்த வழிபாகச் செல்லும் பொதுமக்களையும் ஒழுங்கைக்கு எதிர்ப்பக்கமாக வீதிவழியாகச் செல்பவர்களையும் நோயாளி என்று கருதிக் கொண்டு அவர்களைத் திடீர் என்று வழிமறிப்பதால் பாதசாரிகள் விடயம் தெரியாமல் திண்டாடுகிறார்கள். இவர்களின் இந்த நடவடிக்கை மக்களின் சுதந்திரமான நடமாட்டத்தைத் தடைசெய்வதாக அமைகிறதென்று பக்கத்திலுள்ள வியாபாரிகள் பேசிக் கொள்கிறார்கள்.

### அடுத்த

லிருந்து டாக்கா செல்வார் என தெரிவிக்கப்படுகிறது. மேற்படி தகவலை சிறிலங்கா ஜனாதிபதியின் ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

# மனித உரிமை மீறலை நிபந்தனையாக்க கூடாது

### பாங்கொக் மாநாட்டில் தீர்மானம்

[பாங்கொக்]

அபிவிருத்திக்கான நிதி வழங்கவோ அல்லது அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தவோ மனித உரிமை மீறல் சம்பவங்களை ஓர் நிபந்தனையாக வைக்கும்மேற்குலக நாடுகளின் போக்கை மனித உரிமைகளுக்கான தென்கிழக்காசிய சங்கம் கண்டித்துள்ளது.

மனித உரிமை தொடர்பான ஆசிய நாடுகளின் பாங்கொக் மாநாட்டில் இப் பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் ஜூன் மாதம் வியன்னாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் மாநாட்டில் இப் பிரேரணை பரிசீலனைக்கு வைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இதேசமயம் ஆசிய சங்கத்தின் பிரேரணையை லண்டனில் உள்ள சர்வதேச மனித உரிமை குழு கண்டித்துள்ளது. உள்நாட்டுப் பிரச்சினையில் மனித உரிமை என்ற பெயரில் வெளிநாடுகள் தலையிடக் கூடாது என்று ஆசிய பசுபிக் மாநாட்டு பிரேரணையை சர்வதேச மனித உரிமை குழு கண்டித்துள்ளதுடன் ஆசிய நாடுகள் வெளிநாடுகளின் குறுக்கீடுகளில் இருந்து தம்மை காத்துக்கொள்வதில் அக்கறையுடன் இருப்பதையே இது காட்டுவதாகவும் தெரிவித்துள்ளது.

## மெய்வல்லுநர் போட்டி

(தென்மராட்சி)

யா/கைதடி நாவற்குழி அ. த. க. பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் அதிபர் திரு. வே. இராமர் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு பொ. வீரபத்திரர் அவர்களும், சிறப்பு விருந்தினராக விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (86)

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 02-04-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8889

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-5281, 42-5556, 28-3429, 41 9166, 22-4473, 26-3937, 41-9487, 28-1992, 43-2524, 28-6020, 41-9327, 26-3146, 26-2972 41-9659, 24-4560, 42-1750, 26-4376, 28-3004, 26-2654, 27-9649, 24-4481, 26-3605, 41-9855, 26-7525, 27-7050, 26-2277, 41-8823, 27-7263, 42-2364, 24-8714.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-7941, 22-8075, 26-3046, 24-6699, 26-1495, 26-1285, 42-2432, 26-0672, 26-0691, 41-6544, 26-2827, 41-4984, 42-3726, 28-8037, 22-5742, 28-1111.